Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதில்லை யோசுவா 1:5.

Vol. 71 ... அவர்கள் கைகளின் செய்கைக்குத்தக்கதாக அவர்களுக்கு அளியும் சங்.28:4 ஜூலை 2025 No.7

ஆசீர்வாதமாய் இருப்பாய்

Be a blessing

Andrew Murray

"....நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்..."(ஆதி.12:1-2).

தேவன் ஆபிரகாமிடம் பேசிய வற்றின் ஒரு சுருக்கம் இது. நமக்கும் இது கூறப்படுகிறது. தேவன் நம்மை அழைப்பதின் நோக்கமும், அதற்கு வேண்டிய வல்லமையும், அது இருக்கிற இடமும் நமக்குத் தெரிகிறது.

நீங்கள் ஆசீர்வாதமாக இருப்பதற் காகவே ஆபிரகாமைப் போல உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் அழைக்கிறார்.

தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் போது அது நமக்காக மட்டுமல்ல, நாம் அனேகருக்கு அதைப் பகிர்ந்து அளிக்க வேண்டும். தேவன் அன்பாயிருகிறபடி யால் ஆசீர்வதிக்கிறார். அன்பு தனக்குரிய வைகளை மட்டும் நாடாது. எனவே தேவ அன்பு நமக்குள் வரும் போது நாம் பிறரையும் நாட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் பெற்ற கிருபை பிற ரோடும் பகிர்ந்து கொள்வதற்காகவே என்று நினைக்க வேண்டும். சுயத்தை ஆண்ட வரிடம் ஒப்புவித்து அவர் உங்களை பயன்படுத்த அனுமதியுங்கள். வழிந் தோடும் ஆசீர்வாதத்திற்கு இதுவே வழி.

அவரது பணி செய்யவும் இதுவே ஆசீர்வாதம். நீங்கள்தனிப்பட்ட முறையில் ஆசீர்வதிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட வேண்டும். ஆவியினாலும், சமாதானத்தி னாலும், வல்லமையினாலும் நிரப்பப்பட வேண்டும். அப்போது தான்பிறரை நீங்கள் ஆசீர்வதிக்க முடியும். கிறிஸ்துவில் தேவன் நம்மை அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங் களாலும் நிரப்பியுள்ளார் (எபேசி.1:3). இயேசு இவ்விதமாய் உங்களை ஆசீர் வதிக்கும் போது நீங்கள் நிச்சயமாகவே அனேகருக்கு ஆசீர்வாதமாய் இருக்க முடியும். சந்தேகமோ பயமோ தேவை யில்லை. தேவ ஆசீர்வாதத்திற்குள் வாழ்வின் வல்லமை, பெருக்கம், விரிவாக்கம், தொடர்புகள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு. ஆசீர்வாதம் அயலாரையும் ஆசீர்வதிக்கும் இயல்புடையது. தேவன் தாமே இந்த ஆசீர்வாதத்தை உங்களுக்குத் தர காத்தி ருங்கள். உங்கள் விசுவாசம் உறுதியாயிருக் கட்டும்.

அவரது வாக்குத்தத்தத்தின் மேல் விசுவாசமிருக்க வேண்டும். கர்த்தர் கேட்பது: "நீ உன் தேசத்தையும் இனத்தாரையும் விட்டுப் புறப்பட்டுப் போ" என்பதாகும். ஆதாமுக் குள் பிறந்த நாம் யாவரும் இயற்கையும் மாம்ச தன்மையுமுடையவர்கள். மனிதனுக்கு மிகவும் விலையேறப் பெற்றதாக காணப்படுவதை காணிக்கை யாக கொடுப்பது ஆசீர்வாதத்திற்கு வழி. பழைய வாழ்விலிருந்து தேவன் மட்டுமே வழிகாட்டக் கூடிய புதிய வாழ்வுக்குச் செல்ல வேண்டும். அதாவது முழுவது மாக தேவனுக்காக மட்டுமே வாழ்வது, அவருடைய வாக்குத்தத்தங்களின்படி மட்டுமே நடக்கக்கூடிய ஒரு விசுவாச வாழ்க்கை.

தேவன் தெய்வீக முறைப்படி தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்று வார். அதற்காக சொந்த தேசத்தையும், தந்தையின் வீட்டையும் உலகத்தோடுள்ள தொடர்பையும் மாம்சத்தின் வழிகளையும் விட்டுவிட வேண்டும். புதிய வாழ்வுக்குள் பிரவேசிக்க வேண்டும். அது ஆவிக்குரிய வாழ்வு. தேவனோடுள்ள உறவால் நடத்தப் படும் வாழ்வு. அது ஆசீர்வாதத்தைத் தரக் கூடியது. உங்கள் இருதயம் ஆசீர்வாதத் திற்காக முழுவதும் திறந்திருக்கும். அது விசுவாசத்துடன்காத்திருக்கும். அப்போது அவர் தமது வாக்கை நிறைவேற்றி ஆசீர் வாதமளித்து அனேகருக்கு ஆசீர்வாத மாக்குவார். தேவனோடு வாழுங்கள். உலகத்திலிருந்து உங்களை வேறுபடுத்திக் கொள்ளுங்கள். அப்போது "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்," என்ற ஆண்டவரின் சத்தம் வல்லமையுடன் பேசுவதை கேட்பீர்கள்; "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"

"பிதாவே உமது ஜனத்தை உமக்கு முற்றிலும் சொந்தமாக்கி வாக்குப்பண்ணப் பட்ட தேசத்திற்கு நீர் கொண்டு வரும் பாதையைக் எனக்கு காண்பியும். உமது ஆசீர் வாதங்களால் என்னை நிரப்பும்படி, உம்மைப் பின்பற்றவும், உம்மோடு மட்டும் பேசவும், எல்லாவற்றையும் விட்டுவிட உதவி செய்யும். ஆண்டவரே 'நான் உன்னை ஆசீர்வதிப்பேன்' என்ற உமது வாக்குத்தத்தம் தேவ வார்த்தையாகவே என் இருதயத்தில் வாழட்டும். அப்போது நான் என்னை முற்றிலும் பிறருக்காக வாழவும் ஆசீர்வாதமாக இருக்கவும் ஒப்பு கொடுப்பேன், ஆமென்.

தேவனைப் பிரியப்படுத்த வாழுதல்

Living to please God

Richard Baxter (1615 - 1691)

தேவனைப் பிரியப்படுத்துவது இவ்வுலகில் உங்கள் பணி. அவரைப் பிரியப் படுத்துவதால் உங்கள் ஆத்துமாவுக்கு பாதுகாவல், இளைப்பாறுதல், முழு திருப்தி ஆகியவை கிடைக்கும். முழு உலகமும் உங்களை விரும்பாவிட்டாலும், தேவன் உங்களுக்கு போதுமானவர். அவருடைய அங்கீகாரமும் ஆதரவும் உங்கள் பங்கும் பரிசுமாகும். உத்தமமும் நேர்மையுமாக வாழுகிறவர்களது வாழ்க்கை பாதுகாவலும் இனிமையுமானது. அவர்கள் நல்லவர்களாகக் காணப்படுவதை விட நல்லவர்களாக நடக்கக் கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். தேவன் அவர்களை ஏற்றுக்கொள்வதே அவர்களது திருப்தி. ஒரு நேர்மையான இருதயம் இருப்பது தேவனுடைய இரக்கம். அப்படிப்பட்டவர்கள் உலகத்தை வெறுத்து தேவனை தேவனாகவே ஏற்றுக் கொண்டு, அவரே கர்த்தர், நியாயாதிபதி, தனது பங்கு, எல்லாவற்றிற்கும் எல்லாமானவர் என்று எண்ணுவார்கள். நீங்கள் தேவனையே சார்ந்து வாழ்வதைக் கீழ்க்காணும் குறிப்புகளால் அறிந்து கொள்ளலாம்.

1. நீங்கள் வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்ள அதிகக் கவனமாயிருந்து, எது தேவனைப் பிரியப்படுத்துகிறது, எது பிரியப்படுத்தவில்லை என்பதை அறிய ஜாக்கிரதையாயிருப்பீர்கள்.
2. கடமைகள் செய்யும் போது அது மனிதரைப் பிரியப்படுத்துவதைவிட தேவனைப் பிரியப் படுத்துகிறதா என்பதில் மிகக் கவனமாயிருப்பீர்கள்.
3. உங்கள் செயல்களையல்ல உங்கள் முடிவுகளையும், எண்ணங்களையும், இருதயத் தையும், உள்ளான தன்மைகளையும், அளவுகளையும் பார்ப்பீர்கள்.
4. இரகசிய கடமைகளையும் பகிரங்க கடமைகளையும், மனிதன் பார்க்காதவற்றையும் பார்க்கிறவைகளையும் ஒன்று போல் பார்க்க வேண்டும்.
5. மனச்சாட்சியை கனம் பண்ணுகிறவர்களாகவும், அது தேவனுக்குப் பிரியமல்ல என்று சொல்லும் போது அது அமைதியின்மையையும், அவர் அனுமதிக்கும் போது அது ஆறுதலளிக்கும்.
6. மனிதரைப் பிரியப்படுத்துவது அவர்களது நன்மைக்கு ஏதுவாயிருக்கும். நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த பெருமையும் பேராசையும் கூடாது.
7. மனிதர் பிரியப்பட்டாலும், பிரியப்படாவிட்டாலும் அவர்கள் உங்களை எப்படி நியாயம் தீர்த்தாலும் உங்களை எப்படி அழைத்தாலும் அவை சிறிய காரியங்களாய் இருக்கட்டும். தேவனுடைய தீர்ப்பின்படியே நடக்கட்டும். நீங்கள் அவர்களைச் சார்ந்து வாழவில்லை. தேவன் உங்களில் பிரியப்படும் போது அவர்களுடைய பிரியமின்மை, விமர்சனம், கடினவார்த்தைகள் எல்லாம் ஒன்றுமேயில்லை. இவையெல்லாம் உங்களுக்கு சான்றுகளாயிருக்கும்.

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh,
Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். சங். 55:22

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 ஜூலை மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜெபக்குறிப்பு 3. ***ஊழியங்களுக்காக***

கடந்த மாதம் ஊழியர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று எழுதினேன். இம்மாதம் எல்லா ஊழியங்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும் என்று எழுதுகிறேன். நான் அறிந்த ஊழியங்கள், பத்திரிகை வாயிலாக எனக்கு தெரிந்த ஊழியங்கள், எனக்கு தொடர்பும், ஐக்கியமும் உள்ள சில ஊழியங்கள் பற்றிய ஒரு சிறு பட்டியலை கீழே அச்சிடுகிறேன்.

இதில் சில ஊழியங்கள் பற்றிய விபரங்கள் நம்முடைய **ஜெப கையேடு** புத்தகத்தில் அச்சிட்டுள்ளோம். நீங்களும் எல்லா ஊழியங்களுக்காகவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

1. **இந்திய அருட்பணி இயக்கம்**
2. **ஜெம்ஸ்** - பீஹார்
3. **இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்**
4. **வட இந்திய மிஷனரி சங்கம்** - குஜராத்
5. **கல்வாரி சுவிசேஷ மிஷனரி இயக்கம்** - ஒடிசா
6. **TRUE LIFE MISSION** - உத்தர பிரதேசம்
7. **ஆதீர்வாத இளைஞர் இயக்கம்**
8. **சுவிசேஷ நண்பர் ஐக்கியம்** - கோதையாறு, காணி கிராமம், குமரி
9. **வில்லேஜ் விஷன் ஊழியங்கள்** - கர்நாடகா
10. **நியுமேன் மிஷனரி ஊழியங்கள்**

இம்மாத செய்தி:

தாவீதின் தாகம்

1. அற்பமாய் எண்ணப்பட்ட தாவீது

கர்த்தர் சாமுவேலை நோக்கி: ... நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டு வா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்து கொண்டேன் என்றார் 1சாமுவேல் 16:1.

ஈசாய் தன் குமாரரில் ஏழு பேரை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினான்; பின்பு சாமுவேல் ஈசாயைப் பார்த்து: கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லி;

*உன் பிள்ளைகள் இவ்வளவு தானா என்று ஈசாயைக் கேட்டான்; அதற்கு அவன் **இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்**; அவன் **ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான்**; 1சாமு.16:10,11.*

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந்தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

2. அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது

... அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; ... என்றான்.

ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; ... அப்பொழுது கர்த்தர் இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார்.

அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற் கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார் 1சாமு.16:11-13.

3. சவுலினால் ஆசீர்வதிக்கப்பட்ட தாவீது

*அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய **தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்**; **நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மென்மேலும் பலப்படுவாய்** என்றான்; 1சாமு.26:25.*

4. சவுலுக்காக புலம்பல் பாடின தாவீது

தாவீது சவுலின் பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின் பேரிலும், புலம்பல் பாடினான்.

உயிரோடே இருக்கையில் சவுலும், யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்; மரணத்திலும் பிரிந்து போனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்கள்.

இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம் பரத்தைச்சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்.

போர் முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது.

பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே, யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே, என்று பாடினான் 2 சாமுவேல் 1:17-27.

5. அழுகிறதற்கு பெலனில்லாமல் போகுமட்டும் அழுத தாவீது

தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்த போது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டு போகப் பட்டார்கள் என்றும் கண்டார்கள்.

அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்.

தாவீதின் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமும், கர்மேல் ஊராளான நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயிலும், சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டார்கள்.

தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்; *தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்* 1 சாமு.30:3-6.

6. ஆலயம் கட்ட ஆசைப்பட்ட தாவீது

ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம் பண்ணும் போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்றான்.

அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான் 2 சாமு.7:2,3.

7. ஆலயத்துக்கென்று அள்ளிக் கொடுத்த தாவீது

1நாளாகமம் 28:2,3 அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாத படியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தை கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன்.

ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்.

29:1-5 பின்பு தாவீது ராஜா சபையார் எல்லாரையும் நோக்கி: தேவன் தெரிந்து கொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்ய வேண்டிய வேலையோ பெரிது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை.

நான் என்னாலே இயன்ற மட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன் வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும் பதிக்கப் படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப் பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்.

இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின் மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.

இப்போதும் உங்களில் இன்றையதினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்.

ஆண்டவராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள்: பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; மத்தேயு 6:19,20.

வருகையின் தூதன் ஊழியத்தை மாதந்தோறும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில் / வங்கி வழியாக அனுப்ப இயலாதவர்கள், வருடத்திற்கு ஒரு முறை குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள்.

சிறப்பு காணிக்கைகள் அனுப்பி ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : **95432 21008** உங்கள் சகோதரன்,
உதவி : **94897 40295** **வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

❖ ❖ ❖

2026 தமிழ் நாடு
தேர்தலுக்காக ஜெபியுங்கள்

... நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை.

மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

யாக்கோபு 5:16-18

கிறிஸ்து எல்லாவற்றிற்கும் போதுமானவர்

The all sufficiency of Christ

F.B.Meyer (1847-1929)

"நான் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறேன்" வெளி.1:8, 22:13. அல்பா, ஒமேகா என்பவை கிரேக்க பாஷையின் எழுத்துக்களில் முதலும் கடைசியுமானவை. அவை அவற்றிற்கிடையிலுள்ள அனைத்து எழுத்துக்களையும் உள்ளடக்கியுள்ளன.

இயேசுகிறிஸ்து நமது தேவைகளுக்கெல்லாம் போதுமானவர். நமது குறைவுகளையெல்லாம் அவர் நிறைவாக்குகிறவர். ஆனால் நாம் இயேசுவின் முழுமையை அறிந்திருக்கிறோமா? நமது சொந்த இயல்பான நிலையின் எல்லையற்ற தேவையை நேருக்கு நேர் சந்திக்காவிட்டால் அவருடைய முழுமையை நாம் அறிந்து கொள்ள முடியாது. நீங்கள் அல்பைன் பனிமலை கிராமத்தில் பயனிக்க, வழி காட்டியை ஏற்படுத்தினாலும் பெரிய பனிப்படலங்களைக் கடந்து, ஆழமான பாதாளங்களைப் பாதுகாவலுடன் கடந்து, பனிப்பாறை சரிவுகளில் தப்பி வந்த பின்பு மட்டுமே அவனது அறிவையும் கரிசனையையும் உணர முடியும். இது போலவே இயேசுவுடன் நடக்கும் போது தான் அவரில் நமது தேவைகளெல்லாமே பூர்த்தி செய்யப் பட முடியும் என்பதை அறிய முடியும்.

மிக ஆழமான குழியிலிருந்து அவரைக் கூப்பிடலாம். நமது கூக்குரலுக்கு அவர் தமது செவியை அடைக்க மாட்டார். அவரைக் கூப்பிடும் போது அருகில் வந்து '**பயப்படாதே**' என்பார். உனது ஜீவனை இரட்சிப்பார்.

ஆண்டவரே, ஒவ்வொரு ஆண்டும், மாதமும், நாளும், மணித்துளியும் எனது வாழ்விலும், பணியிலும் நீர் அல்பாவாகவும் ஒமேகாவாகவும் இருப்பீராக. அனைத்துக் காரியங்களும் உம்மில் ஆரம்பித்து தொடர்ந்து உம்மில் முடிவு பெறுவதாக. ஆமென்.

❖ மானிட விளக்கத்தின்படி **பாவம்** ஒரு சிறு விளைவுதான் என்று கூறும் போது தேவனுடைய மிகப்பெரிய இரட்சிப்பு அகற்றப் பட்டுவிடுகிறது.

❖ இந்த சூழல்களில் நாம் **பாவத்தை** நமது அந்தஸ்திலோ அல்லது நம்மைச் சுற்றி வாழும் பொல்லாதவர்களின் அந்தஸ்தையோ பயன்படுத்தி அளக்க மாட்டோம்.

தேவனைக்குறித்த சரியான ஒரு பார்வை

A right view of God

Richard Owen Roberts

ஒரு நபர் தேவனைப் பற்றி என்ன நினைக்கிறார், தங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள், பாவத்தைக் குறித்து அவர்களது எண்ணம் என்ன? அவர்கள் இரட்சிப்பைக் குறித்து என்ன சிந்திக்கிறார்கள், இவைகளுக்கெல்லாம் இடையில் ஒரு வல்லமையான தொடர்பு இருக்கிறது.

பரிசுத்த வேதவாக்கியங்கள் தேவனை வெளிப்படுத்துவதை விட்டு விட்டு, அதற்கு மிகவும் தாழ்வான பார்வையுடன் இருப்பவர்கள் அனேகர். வேத புத்தகத்தில் அவர் தம்மை விவரிக்கும் மொழிநடைகளைப் பார்ப்போம்: **"இருக்கிறவராகவே இருக்கிறேன்"** யாத்.3:14. **"நான் கர்த்தர், நான் மாறாதவர்"** மல்.3:6. **"நான் பரிசுத்தர்"** 1பேது.1:16. **"நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர்"** எரே.23:24. **"எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்"** ஏசா.46:10. **"உன்கிரியைகளை அறிந்திருக்கிறேன்"** வெளி.2:2. **"என் பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவேன்"** ஏசா.1:24. அவர் பாவத்திற்கு மென்மையானவராகவும், மனந்திரும்பாமலும் நீடித்து அதில் நிலைத்திருக்கிறவர்களுக்கு அன்புள்ளவராகவும் தம்மை வெளிப்படுத்தவில்லை. அவர் தம்மை மனிதரோடு ஒப்பிடுவதில்லை. ஆனால் நமது நினைவுகள் அவருடைய நினைவுகளும், நமது வழிகள் அவருடைய வழிகள் அல்லவென்றும் கூறுகிறார்.

அவருக்கு நாம் தேவை என்று குறிப்பிடவில்லை, ஆனால் நமக்கு அவர் தேவை என்பதை வலியுறுத்துகிறார். நமது வாழ்க்கை முறைக்கு அவர் தம்மைக் கொண்டு வராமல், நாம் அவரைப் போல வாழ அழைக்கிறார். நாம் நினைப்பதற்கு எதிராக தேவன் நீதி நிறைந்தவராயிருக்கிறார். அதனால் அவர் நோவா காலத்தில் ஜலப்பிரளயத்தால் அன்றிருந்த நாகரீகத்தை அழித்தார். சோதோம் கொமொரா மேல் அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்கப் பண்ணினார். சாந்தமும் மனத்தாழ்மையுமான இயேசு வேதபாரகர், பரிசேயருடையமாய் மாலத்தைப் பார்த்து: "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ! சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?" மத்.*23:23-33.* இதே கிறிஸ்து கோராசீன், பெத்சாயிதா பட்டணங்களைப் பார்த்து "உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' மத்.*11:21-22.* அதே வேளையில் இன்னொரு எச்சரிப்பு கூறப்படுகிறது: "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள்வரைக்கும் நிலைத்திருக்கும். நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" மத்.*11:23-24.*

"நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொருங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்" ஏசா.*57:15.* இதை ஒருபோதும் மறவாதீர்கள்.

சுயத்தைப் பற்றிய சரியான பார்வை

வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி தேவனை பற்றிய உயர்வான எண்ணங்களை வைத்திருப்பவர்கள், அதற்கேற்ப தங்களை தாழ்வாக நினைக்கும் பார்வைக்கு தள்ளப்படுகிறார்கள். ஒரு மனிதனும் தன் பார்வையில் பெரியவனாய் இருக்க மாட்டான்; அவன் கண்கள் உயர்ந்தவரும், அவர் நாமம் பரிசுத்தரும், அவர் ஒருவரே பெரியவருமான தேவனில் நிலைத்திருக்கும் போது. மாறாக தேவனைத் பற்றிய தவறான பார்வை தன்னைப் பற்றிய உயர்ந்த பார்வையை ஊக்குவிக்கிறது. மனித பெருமை அவர்கள் தங்களைத் தாழ்மைப்படுத்துவதற்கு தூண்டுவதில்லை. ஏனெனில் அவர்களிடம் தேவனைக் குறித்த மேன்மையான பார்வை இல்லை. எனவே அனேக மனித பாவங்கள் பெருமையிலிருந்து எழும்புகின்றன. எனவே பெருமை **"பாவத்தை உற்பத்தி செய்கிறது"** என்று கூறப்படுகிறது. அது **"தடுப்புச் சுவர் பாவம்"** என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் கடக்க முடியாத தடுப்புச்சுவர்களை பெருமையுள்ள பாவிகளுக்கும் - பெருமையுள்ள பாவிகளுக்குமிடையிலும், பெருமையுள்ள பாவிகளுக்கும் - தாழ்மையான பரிசுத்தவான்களுக்குமிடையிலும், பெருமையுள்ள பாவிகளுக்கும்-தேவனுக்குமிடையிலும் எழுப்பிவிடுகிறது.

பாவத்தைக் குறித்த சரியான பார்வை

சுயத்தைக் குறித்த உயர்ந்த பார்வை பாவத்தைப் பற்றிய சிதைக்கப்பட்ட பார்வையைத் தரும். பெருமையுள்ள பாவி, தனக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதும் ஏற்றுக்கொள்ளக் கூடாததுமான உரிமையைத் தீர்மானிக்கக் கேட்கிறான். அவனது பெருமை பாவத்தின் விளக்கத்தைக் குறித்த தேவனுடைய பார்வையினை விலக்கி விட்டு அவனது முரட்டுத் தன்மை தேவனுடைய பயமுறுத்தல்களையும் எச்சரிப்புகளையும் உதாசீனம் பண்ணுகிறது. எது சரி எது தவறு என்று தீர்மானிக்கக்கூடாதவனாக பத்து கற்பனைகளைக் கூட கடைப்பிடிக்க முடியாமல், ஒரு தீர்க்கதரிசி, ஆசாரியன் அல்லது பிரசங்கி சொல்வதைக் கவனிக்க மனதில்லாமல் காணப்படுகிறான். கடந்த தலைமுறையினர் பாவத்தின் விளைவால் அனுபவித்தவற்றை தனது பெருமையால் உதாசீனம் பண்ணுகிறான். அவனது அழிவு தாமதிப்பதாலும், அவனுடைய பாவத்தின் அளவு நிரப்பப்பட்டுக் கொண்டிருப்பதாலும் *(1தெச.2:16)*, தேவ கோபம் இன்னும் இறங்கி வராததாலும், பிறரும் இவனது தீய வழிகளைப் பின்பற்றுகிறார்கள். பெருமை உலகிலும் சபையிலும் நுழைந்துவிட்டபடியால் பாவத்துக்கு புது விளக்கங்கள் கொடுக்கப்பட்டு சீரழிவு தேசம் முழுவதும் வெட்டுக்கிளிகள் போல் பரவிவிட்டது.

இரட்சிப்பைக் குறித்த சரியான பார்வை

பாவத்தைக் குறித்த சிதைந்த பார்வை, இயற்கையாகவே இரட்சிப்பை குறித்த சிதைந்த பார்வையைத் தருகிறது. மானிட விளக்கத்தின்படி பாவம் ஒரு சிறு விளைவுதான் என்று கூறும் போது தேவனுடைய மிகப்பெரிய இரட்சிப்பு அகற்றப்பட்டுவிடுகிறது. பாவம் முக்கியத்துவமில்லாததாயிருந்தால் ஒரு சிறு அளவிலான இரட்சிப்பு போதுமே. துக்கமானது என்னவென்றால், திரளான கூட்டமான பேர்க் கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பு என்பது மிக அற்பமானதாயிருக்கிறது.

தேவனைப் பற்றிய நமது பார்வை சரியாயிருந்தால், நம்மீதுள்ள நமது பார்வை சரியாயிருந்து நாம் ஒன்றுமில்லை என்று நம்மைத் தாழ்த்துவோம். இந்த எண்ணம் மனச்சோர்புக்கு அல்ல நம் முழு இருதயத்தோடும் அவரை வாஞ்சிக்கத் தூண்டும். நாம் அவரை விட்டு தூரமாயிருக்கிறோம் என்ற எண்ணம் அவரை நெருங்கத் தூண்டும். அவருடைய கிருபையின் உண்மை அனுபவம் இந்த அருகாமையின் அனுபவத்தைத் திருப்திப்படுத்தும். தேவனுக்கான பசியும் தாகமும் பலமாக அதிகரிக்கும் போது அவரை நெருங்கிச் சேருவதற்கான உதவியைப் பெறுவது பெரிதல்ல. இந்த சூழல்களில் நாம் பாவத்தை நமது அந்தஸ்திலோ அல்லது நம்மைச் சுற்றி வாழும் பொல்லாத வர்களின் அந்தஸ்தையோ பயன்படுத்தி அளக்க மாட்டோம். பாவம் நமக்கு மிகவும் வெறுப்பாகிவிடும். நாம் அதிலிருந்து விடுபட வாஞ்சிப்போம். தேவனிடத்தில் வாஞ்சையாயிருக்கிற எவரும் ஒரு சோம்பல் மார்க்கத்தால் திருப்தியடைய மாட்டார்கள். சர்வ வல்ல தேவனை விட்டு எங்கும் இரட்சிப்பைத் தேடவும் மாட்டார்கள்.

எனவே முழு வேதாகமத்தின் தேவனிடம் முழுமையாக திரும்புவதே ஒவ்வொரு நாளும் மிக உயரிய முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

பாவத்தைக் குறித்த சிதைந்த பார்வை, இயற்கையாகவே இரட்சிப்பை குறித்த சிதைந்த பார்வையைத் தருகிறது.

அதோனிராம் ஜட்சன் மற்றும் ஆன் ஜட்சன் –பகுதி 3

பர்மா சென்ற மிஷனெறிகள்

Adoniram and Ann Judson (Part 3) - Missionaries to Burma

T.W. Engstrom

ஜூன் மாதம் 1819 ம் ஆண்டு பர்மா வந்து இறங்கிய ஏழு ஆண்டுகளுக்குப் பின் முதல் பர்மிய விசுவாசி ஞானஸ் நானம் பெற்றார். ஒரு வாரத்திற்குப் பிறகு ஜட்சன் இவ்வாறு தமது பத்திரிகையில் எழுதினார்: "முதல் முதலாகக் கர்த்தரு டைய பந்தியில் ஒரு பர்மிய விசுவாசி யோடு உட்கார தேவன் தந்த தருணத்தை பல வருடங்களுக்கு முன்னதாகவே எதிர் பார்த்தேன் - கர்த்தருடைய பந்தியை இரு மொழிகளில் அனுசரிக்க கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்".

சோதனைகள்

ஏறக்குறைய இதே வேளையில் அப்பகுதியில் அன்புடன் பழகிக் கொண்டிருந்த அதிகாரி மாற்றலாகி ஒரு கொடுங்கோலன் பதவியிலமர்ந்தார். தேவ கிருபையால் மிஷன் நிலையம் பாதுகாக்கப்பட்டது. இதுவரை அரசாங்க அதிகாரிகள் மிஷனெறி பணிக்கு அதிக ஆதரவாயிருக்காவிட்டாலும் புதிய வைஸ்ராய் அதிக கஷ்டங்களை ஜட்சன் தம்பதிகளுக்குக் கொடுக்க ஆரம்பித்தார். அரசாங்க அனுமதியின்றி பர்மாவில் தொடர்ந்து ஊழியம் செய்வது பயனற்றது. பேரரசர் சுவிசேஷ ஒளி பெற்று சுதேசிகள் மத்தியில் மிஷனெறி பணி செய்யும்படி உதவினாலன்றி முன்னேற்றம் ஏற்படாது என்று ஜட்சன் உணர்ந்தார். 1819 ம் ஆண்டு டிசம்பர் 27 ம் நாள் ஜட்சன் **ஆவா** சென்று பேரரசரின் பாதுகாவலுக்கு விண்ணப்பிக்க தீர்மானித்தார். ஆன் ஜட்சன் ரங்கூனிலேயே தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பேரரசரிடம் அனுமதி பெறுதல் அற்பமான காரியமல்ல. மிக முக்கிய மான ஒன்று அவரது தகுதிக்கேற்ற ஒரு வெகுமதி வாங்குவது. ஜட்சன் பிற உதவியாளர்களுக்குமாக ஏராளமான வெள்ளி மற்றும் பிற வெகுமதிகளைக் கொண்டு வந்திருந்தார். அவர் பேரரசரை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்று மார்க்க சுயாதீனத்திற்காக கெஞ்சினார். எனினும் அவரது வேண்டுகோள் மறுக்கப்பட்டது. இப்போது மிஷனெறிகளின் நிலை முந்தியதைவிட மிக மோசமாகிவிட்டது. இப்போது ஜட்சன் இராஜ குடும்பத் தினருக்கும் அதிகாரிகளுக்கும் சந்தேகத் திற்குரியவராகவும் அவர்களது கருணை யில் வாழவேண்டியவராகவுமிருந்தார். ஜட்சன் தைரியமில்லாதவராயிருந்தால் பர்மாவை விட்டு சென்றிருக்க வேண்டும். அவரது நம்பிக்கை தேவனிலிருந்தபடி யாலும் விசுவாசம் அசையாததாயிருந்த படியாலும் நம்பிக்கை அற்றுப் போகாம லிருந்தார். அவர்கள் இருவருடைய விசுவாசமும் உறுதியாயிருந்தது.

இவ்வேளையில் வேதபுஸ்தகம் முழுவதையும் ஏறக்குறைய பர்மிய மொழியில் மொழியாக்கத்தை முடித் திருந்தார். அரசாங்கத்தால் இது அழிக்கப் பட்டுவிடுமோ என பயம் இருந்தது. மட்டுமின்றி ஆன் ஜட்சன் தனது ஆரோக் கியக் குறைவால் நாட்டை விட வேண்டிய கட்டாயத்திலிருந்தார். இங்கிலாந்துக்குப் பிரயாணம் பண்ணி பின்பு சொந்த நாடான அமெரிக்கா திரும்பினார். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கணவனை விட்டுப் பிரிந்து இருக்க வேண்டியதா யிற்று. சற்று குணமடைந்து மீண்டும் பர்மா வந்தார். சுதேசிகள் மேல் தனக் கிருந்த அன்பு இப்போது அதிகரித்து விட்டதாக அவர்கள் சாட்சி கூறியிருக் கிறார்கள்.

1824 ம் ஆண்டு மேய் மாதம் பத்தா யிரம் பிரிட்டிஷ் மற்றும் கிழக்கிந்தியப் படையினர் ரங்கூன் வந்திறங்கினர். இதனால் ஆங்கில மற்றும் அமெரிக்க மிஷனெறிகளின் பணியை இன்னும் கடினமாக்கியது. போர் ஆரம்பித்ததும் ஜட்சனும் பிற மிஷனெறிகளும் பர்மாவின் சிறையிலடைக்கப்பட்டனர். ஆன் ஜட்சன் சொந்த வீட்டிலேயே சிறைக் கைதியானார். மூன்று நாட்களுக்குப் பிறகு ஆன் ஜட்சன் விடுவிக்கப்பட்டார். அப்போது கணவனுக்காகப் பேச ஒரு வாய்ப்பு கிடைத்தது.

மிஷனெறி கைதிகள் மிகவும் குரூரமாக நடத்தப்பட்டனர். ஜட்சன் தன்னோடு நூறு கைதிகளுமாக ஒரு அறையில் அடைக்கப்பட்டார். சுவர் களின்கீறல்கள் வழியாக வரும் காற்றைத் தவிர அங்கு காற்றோட்டமில்லை. ஏறக்குறைய இருபது மாதங்கள் இவ்வித பாடுகளை அனுபவித்தார். இந்த நாட்களில் அவரது உத்தம மனைவி நல்ல செறிவூட்ட உணவுகளைக் கொடுத்திரா விட்டால் பர்மாவில் மிஷனெறி பணி முடிவடைந்திருக்கும். அவள் ஒரு பலவீன பாண்டமாக இருந்தும் ஒவ்வொரு நாளும் கணவனிடம் வந்து உணவளித்து ஆறுதலான வார்த்தை களையும் கூறி வந்தாள். அவள் சகித்த பாடுகளால் காய்ச்சலால் அவதிப் பட்டாள். டாக்டர்கள் அவள் மரித்து விடுவாள் என்ற போதிலும் தேவன் அவளை ஆச்சரியமாகக் குணப்படுத்தி னார்.

ஏழு மாதங்கள் தொடர்ந்து ஆன் ஜட்சன் தினமும் அரசாங்க அதிகாரிகள் அல்லது அரச குடும்பத்தினரை இக்கைதி களுக்காக சந்தித்தாள். அவளது ஒரே நம்பிக்கை எதிர்காலத்தில் விடுதலை கிடைத்துவிடும் என்ற வாக்குத்தத்தமாகும்.

அளவுக்கு மேல் வெப்பமும், பூச்சிகளின் தொல்லையும் ஜட்சனுக்கு அதிகக் காய்ச்சலைக் கொண்டு வந்தன. ஆன் மறுபடியும் மறுபடியும் கேட்டபடி யால் இறுதியில் ஒரு பழைய சிங்கக் கூட்டிற்கு மாற்றப்பட்டார். இங்கு சூரிய வெப்பத்திலிருந்தும் முந்தைய சிறையி லிருந்தும் சற்று விடுதலை கிடைத்தது. ஆன் ஜட்சன் மிகக் கரிசனையோடு இருந்தபடியால் நல்ல உணவும் சில அனுகூலங்களும் அவருக்குக் கிடைத்தன. ஆனுடைய சந்திப்புகளும் ஆறுதலான வார்த்தைகளும் அனைத்து உத்தம மிஷனெறிகளுக்கும் சிறையில் தொடர்ந்து ஆறுதலாகவும் சந்தோஷமாகவுமிருந்தது.

ஜட்சன் **ஆவா** சிறையிலிருந்தது ஒரு பயங்கர அனுபவம். ஜெபத்தி னாலும் தேவனுடைய வல்லமையாலும் மட்டுமே ஜட்சன் தம்பதிகள் பாதுகாக்கப் பட்டு நிலைநிறுத்தப்பட்டார்கள். ஆன் ஜட்சன் இவர்களுடைய சிறையிருப்பு கள் குறித்தும் பாடுகள் குறித்தும் விவரித்து எழுதினார்கள்.

போர் முடிந்ததும் அனைத்து சிறைக் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். மீண்டும் மிஷன் நிலையத்துக்கு வந்த போது அங்கு ஜட்சன் எல்லாம் குழம்பிய நிலையிலிருப்பதைக் கண்டார். மிஷன் வீடு சீரழிந்து சீடர்கள் ஓடிப்போயிருந் தனர். ஜட்சன் சற்று ஓய்வெடுக்க ஆம்ஹெர்ஸ்ட் பட்டணம் செல்வது ஞானமானது என்று எண்ணினார். இப்பட்டணம் பிரிட்டிஷ் பாதுகாவ லுக்குள் இருந்தது.

விண்ணக அழைப்பு

சிறையிலிருந்து வெளிவந்த சில நாட்களுக்குள் ஒரு பர்மிய பிரசாரக் கூட்டத்தில் ஆங்கிலேயருக்கும் பர்மிய ருக்குமிடையிலுள்ள பேச்சுவார்த்தைக்கு விளக்கமளிக்க அவர் அழைக்கப் பட்டார். இந்த சமாதானப் பேச்சு வார்த்தை நடக்கும் போது ஆன் ஜட்சன் ஒருவித காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். தலைமுடி சிரைக்கப்பட்டு தலையும் பாதங்களும் கொப்புளங்களால் நிறைந் தன. பர்மிய ஆதிவாசிகள் அவர்கள் மரித்துவிட்டார்கள் என எண்ணினர்.

சில காலங்களுக்குப் பின்பு தேவன் இந்த உத்தம ஊழியக்காரியை தம் மண்டை அழைத்துக் கொண்டார். அது 1826 அக்டோபர் 24 ம் நாள். அப்போது அவர்களது வயது 37. தன் வாழ்நாள் முழுவதையும் விலையேறப் பெற்ற இரட்சகருக்காகவே செலவு செய்தார்கள். இன்றுவரை அவர்களது சாட்சி நிலைத்து நிற்கிறது. அவர்களது உடல் அரசு மரியாதையுடன் ஆம்ஹெர்ஸ்டில் அடக்கம் பண்ணப்பட்டது. ஆன் ஜட்சனுடைய பெயர் முதல் பெண் மிஷனெறி என்பதில் மட்டுமல்ல தனது ஆண்டவருக்காக முழுமையாக அவர் சித்தம் செய்த ஒருவராகவும் எண்ணப்படுகிறார்கள்.

அருமையான மனைவியை இழந்த ஜட்சன் இன்னும் அதிகமாக ஆண்டவ ருக்காக தனிமையிலும், இதய வேதனை யிலும் பாடுபட்டார். வேத புத்தகத்தை பர்மிய மொழியில் மொழியாக்கம் செய்தார். இது அந்த மக்களுக்கு அவர் செய்யும் மிகப்பெரிய சுவிசேஷ ஊழியம் என்று எண்ணினார். 1840 ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தப் பணியை அவர் முடித்தார். இது அவருடைய ஊழியத்தில் மிகப் பெரிய கொடை. இதற்குள் அவர் நூற்றிற்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து விட்டார்.

(6 -ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

1845-ல் ஜட்சன் முதல்முறையாக முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் தன் சொந்த வீட்டிற்குத் திரும்பினார். உலகமெல்லாம் இப்போது அவரது பணியால் கவரப்பட்டு வீடுதோறும் சபைதோறும் மக்கள் கூடி அவரை பார்க்கவும் அவர் பேசுவதைக் கேட்கவும் திரண்டனர். பர்மா தான் அவர் நேசித்த சொந்த நாடாயிருந்தது. அமெரிக்காவை முதலாவதாகவும் கடைசியாகவும் சந்தித்தார்.

பர்மா திரும்பிவந்து பர்மிய அகராதியை மொழி பெயர்த்தார். இதிலே பல மணிநேரங்களைச் செலவழித்த அவர், சுதேசிகளுக்கு சுவிசேஷத்தையும் பிரசங்கித்தார்.

கடின உழைப்பால் சரீரம் பலவீன மடைந்தது. பின்நாட்களில் மருத்துவர்கள் கடல் யாத்திரை செய்து ஆரோக்கியத்தினை பாதுகாக்க ஆலோசனை கூறினர். இவ்வாறு ஃபிரான்ஸ் தீவுகளுக்குப் பிரயாணம் பண்ணின போது தேவன் அவரை அழைத்துக் கொண்டார். 1850-ல் அவர் மரித்து கடலிலேயே அடக்கம் பண்ணப்பட்டார். பர்மியர், கேரன்கள் மத்தியில் 63 சபைகளை ஸ்தாபித்திருந்தார். பர்மாவில் சுவிசேஷம் பரம்ப இவரே காரணமாயிருந்தார்.

நமது தேவன் வலிமை மிகுந்தவர்

Mighty is our God

Charles H Spurgeon

"இதோ, தேவன் மகத்துவமுள்ளவர், அவர் ஒருவரையும் புறக்கணியார்; மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்" யோபு 36:5.

"தேவன் மகத்துவமுள்ளவர்" என்றால் அவரிடம் அளவிட முடியாதும், எண்ணிப்பார்க்கக் கூடாததுமான பெலனும் வல்லமையும் உள்ளது என்பது தான் பொருள். "தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே" சங்.62:11. ஏற்கெனவே தேவன் செய்தவைகளெல்லாம் அவரது வல்லமையை நிரூபிக்கின்றன. என்றாலும் அவரது மிகப்பெரிய பணிகளிலிருந்தும் அவர் இன்னும் எவற்றையெல்லாம் செய்ய வல்லவர் என்பதை யூகித்துப் பார்க்க முடியவில்லை. "இதோ, இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக் குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான்" யோபு 26:14.

அனைத்து வல்லமையும் அவரிடத்திலிருந்தே வருகின்றன

கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை. கீழே தரப்படும் உண்மைகளிலிருந்து அவரது வல்லமை குறித்து சில காரியங்களைக் கற்றுக் கொள்வோம். முதல் முதலாக இந்த பிரபஞ்சத்திலுள்ள அனைத்து வல்லமையும் தேவனிடமிருந்தே வந்தது. இன்னும் அந்த வல்லமை அவரிடமிருந்து வந்து கொண்டே இருக்கிறது. அவர் கட்டளையிட்டால் ஒரே நிமிடத்தில் அது நின்று விடும். இயற்கையின் சக்கரம் அசையச் செய்தது அவரே. அவரது கட்டளையால் அது சுழல்வது நின்றுவிடும். எந்த விதமான மானசீக கலைப்பிரிவாக இருந்தாலும் அது கேரூபீனாக அல்லது சேராபீனாக அல்லது தூதர் அல்லது மனிதராக இருந்தாலும் அது அவரது உருவாக்கும் வல்லமையின் வெளிப்பாடு ஆகும். அதை அவரது நித்திய சூரியனின் ஒரு கதிர் என்றும் கூறலாம். ஆயினும் அவர் தமது சத்துவத்தை கட்டுப்படுத்திவிட்டால் அவை நின்று விடும். அவர் சித்தம் கொண்டால் மத்திய கோளத்தை சுற்றி வரும். எண்ணற்ற சிறு கோள்கள் கட்டுப்பாடின்றி வேகமாக ஓடி குழப்பங்களை ஏற்படுத்தி தவிர்க்க முடியாத அழிவுகளை ஏற்படுத்தும். எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் வைத்திருப்பதற்கு ஏதுவான புவியீர்ப்பு விசை, அவர் தமது வலிமையை எடுத்து விட்டால் ஒரே வினாடியில் உடைந்து போகும். அணுக்களுக்கிடையில் காணப்படும் ஒத்திசைவு இல்லாமற் போவதால் அவை கரைந்து இல்லாமற் போய் அகிலாண்டத்தை வெறுமையாக்கிவிடும். எனவே அவரது வலிமையைக் குறித்து நாமும் நெகேமியாவுடன் சேர்ந்து "நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும் வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வானசேனைகள் உம்மைப் பணிந்து கொள்ளுகிறது" (நெகே.9:6) என்று சொல்லுவோம்.

எந்த ஒரு உதவியுமில்லாமல் இந்த மகாப் பெரிய தேவன் எல்லாவற்றையும் செய்யக் கூடியவர். எல்லா வலிமையும் அவரிடத்தில் இருப்பதால் அவருக்கு எந்த உதவியும் தேவையில்லை. சிருஷ்டிகள் அவருடைய பெலனுக்கு அனுகூலம் செய்வதில்லை. அவை அவரிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொண்ட சத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. சிருஷ்டிகளின் ஞானமும் விசைகளும் அவருக்கு எதிராக எழும்பினாலும் அவரது நோக்கங்கள் எளிதாகவே நடைபெற்றுவிடும். அவரது சத்துவத்தின் மேன்மைக்கு முன்பாக தற்போது மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த வலிமையும் நிற்பதில்லை. பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் அவர்களை ஏளனம் செய்வார். அவருக்கு எதிராக தங்கள் வலிமையின் அந்தஸ்தை காண்பிக்கிறவர்கள் அவரது கட்டுப் பாட்டுக்குள் இருக்கிறார்கள். அவரது எதிரிகள் அவரது பாதப்படியில் இருக்கிறார்கள். அவர் களது கோபத்திலிருந்து அவரது சமாதானமான நோக்கங்களைக் கொண்டு வருகிறார். "மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும், மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்" சங். 76:10.

தேவன் ஒருபோதும் சோர்ந்து போவதில்லை

தேவன் தாம் விரும்புகிறவைகளையெல்லாம் செய்து முடித்தபின் அவர் தமது சத்துவத்தை செலவு செய்ததில்லை என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். "பூமியின் கடையாந்திரங்களைச் சிருஷ்டித்த கரத்தராகிய அநாதிதேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதைக் கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது" ஏசா.40:28. அவர் எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் தூக்கத்திற்கு ஏதுவான களைப்பு அவருக்கு ஒருபோதும் ஏற்படுவதில்லை. அவர் எப்போதும் கிரியை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இளைப்பாறுதலுக்காக இடைவெளி எடுத்துக்கொள்வதில்லை. ஏனெனில் அவருக்கு களைப்போ தளர்வோ ஏற்படுவதில்லை. அவர் திட்டமிட்ட யாவற்றையும் செய்து முடித்த பின்பும் தொடர்ந்து செயல்பட ஆயத்தமாயிருக்கிறார். நமது எண்ணப்படி அவர் தமது வல்லமையின் உச்சத்திற்கு சென்றுவிட்டார் என்று கருதினாலும் அவர் தமது வலிமையின் ஆரம்பத்திலேயே இருக்கிறார். இவையெல்லாம் அவரது அங்கியின் ஓரங்கள் மட்டுமே. அவரது மகிமையின் முழுமை இன்னும் காணப்படவில்லை. நான் அதைப் பற்றிய குறைந்த அறிவுள்ளவனாகையால் அதைக் குறித்துப் பேசும் போது நடுங்குகிறேன். ஆனாலும் நிச்சயமாக மிகப்பரந்த புத்திசாலிகூட உணர்ந்து கொள்ள முடியாத அளவில் மனித இருதயத்தில் பிரவேசியாத அளவில் அவரது சத்துவம் மேலானது என்பது உறுதி.

ஞானத்தில் வலிமையானவர்

முதலாவது குறிப்பிட்ட வேதபகுதியில் அவர் எல்லாவற்றிலும் மகத்துவமானவர் என்று பார்த்தோம். ஆங்கிலத் திருப்புதலில் 'வல்லமையிலும் ஞானத்திலும் மகத்துவமானவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தேவன் மனதளவில் வல்லமையுள்ளவர். அவருடைய அறிவிற்கு அளவேயில்லை. அவர் பௌதிகத்தில், அதாவது சிருஷ்டிப்பு, பாதுகாப்பு, அழிப்பு போன்றவற்றில் மட்டுமல்ல, அவரது அறிவின் வல்லமையில் மகத்துவமானவர். "அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்" ஏசா.28:29. "நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது" சங்.147:5. தேவன் ஆவியாயிருப்பதால் எனது கருத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்துவது கடினம். ஆயினும் அவர் உள்ளத்தையும் புத்தியையும் கொண்டிருப்பதால் அந்த வட்டாரத்தில் அவர் சர்வ வல்லமை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளவராயிருப்பது போலவே பௌதீக உலகிலுமிருக்கிறார்கள். இதுவே அவரது சிருஷ்டிகளின் பாதுகாவல் - அவர் மகா பெரிய உள்ளமுடையவரும் பெரிய எண்ணங்களுடையவரும் மிகப்பெரிய வடிவமைப்பாளரும், ஞானம் நிறைந்த வரும் நற்குணங்களில் சிறந்தவருமாவார்.

தேவன் எவரையும் வெறுப்பதில்லை

அவர் வல்லமை மிகுந்தவர் என்பதால் அவர் எவரையுமே வெறுப்ப தில்லை. அதற்குரிய நிரூபங்களுண்டு. அவர் மகா பெரியவரும் சத்துவம் மிகுந்தவருமாயிருப்பதால் எல்லாமே அவரைவிட சிறியவைகளே. முடிவற்ற தேவனுக்கு மேலானது எதுவுமில்லை. ஏராளமான பெரிய உலகங்கள் இருந் தாலும் அவற்றின் அளவை மனிதன் கணக்கிட முடியாது. உலகங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் அவற்றை எண்ணாமலே விட்டுவிடலாம். ஆயினும் தனியாகவோ கூட்டமாகவோ எண்ணினாலும் தேவனுக்கு அவை ஒரு வாளியில் ஒரு சொட்டு போன்றதாகும். எனவே எல்லாம் சிறியவைகளாயிருப்ப தால் அவரது மகத்துவத்திற்குக் கீழாக எல்லாம் ஒரே அளவாகவே இருக் கின்றன. அவரோடு ஒப்பிடும் போது அவர் காண்பிக்கும் கரிசனையும் கவனிப்பும் விஸ்தாரமானவை.

சிருஷ்டிப்பைப் பாருங்கள். மகாப் பெரியவரும் வல்லவருமான தேவன் வடிவமைத்த பெரியவைகளும் சிறிய வைகளுமான அனைத்து சிருஷ்டிகள் மேலும் ஒரேவிதமான கவனத்தை வைத்திருக்கிறார். இவ்வாறு தெய்வீக கரிசனை அனைத்து சிருஷ்டிகள் மீதும் இருக்கும் போது அவரோடு ஒப்பிடும் போது முக்கியத்துவமற்றதும் பெலவீன மானதுமான எல்லாவற்றின் மேலும் அவரது கரிசனை செயல்படுவது நிஜம்.

அவர் சிறிய ஜந்துக்கள் மீதும் கரிசனையுள்ளவர். அவரது மகத்துவத்தை அவர் வடிவமைத்த மகிமை நிறைந்த உலகில் வெளிப்படுத்தினது போல சிறிய பொருட்கள் மீதும் காண்பித்திருக்கிறார். எண்ணற்ற சிருஷ்டிகள் தேங்கி நிற்கும் நீரில் ஒவ்வொரு சொட்டு நீரிலும் விளையாடிக்கொண்டிருக்கும் போது சர்வ வல்லவரின் கரிசனை அவற்றின் மேல் காணப்படுவது எத்தனை ஆச்சரியம்! இந்த நுண்ணிய உயிரினங்களின் உடல் களின் ஒவ்வொரு பகுதியும் தேவனுடைய அற்புதமான திறமையையும் புகழக் கூடிய வடிவமைப்பையும் பெற்றுள்ளன. அவைகளின் நுண்ணியதன்மை நமது ஆச்சரியத்தினை அதிகரிக்கச் செய்து தெய்வீக சிருஷ்டிகரையும் அவரது மகத்துவத்தையும் உணரச் செய்து நாம் அவரை மேன்மைப்படுத்த வற்புறுத்து கின்றன.

ஒரு கொசு அல்ல ஈ கவனிக்கப் படுவதும். கேரூபீம் சேராபீன்கள் கவனிக்கப்படுவதும் வேறுபாடற்றவை. அவர் நிலத்தின் புழுவையும் நீரோடை யின் மிகச் சிறிதான உயிரினங்களையும் பாதுகாக்கிறார். நுண்ணிய உயிரினங் களிலிருந்து பெரிய விலங்குகள் வரை கருத்துடனே தம் மனதைச் செலுத்தி உருவாக்கினவர் எவரையும் வெறுப்ப தில்லை. அவரைத் தேடுகிற எவரையும் அவர் வெறுப்பதில்லை. புழுக்களையும் ஈக்களையும் பராமரிக்கிறவர் தாழ்மை யுள்ளவர்களின் ஜெபத்தினைக் கேட்ப தோடு அறிவீனமானவர்களின் வேண்டு தல்களை மறுப்பதில்லை. அவருடைய குமாரனாகிய இயேசு இருதயத்தில் சாந்தமும் மனத்தாழ்மையும் உடைய வராய், சிறுபிள்ளைகள் தம்மிடம் வர இடமளித்து ஆதரித்தவர், மனிதரில் சிறியவராய் நாமிருந்தாலும் நம்மை வெறுக்கவேமாட்டார்.

இதேவிதமாகவே எந்த சிறிய காரியங்களிலும் அவரது தன்மையை நாம்காணலாம். அவரது கரிசனை பெரும் நாடுகளுக்கிடையே ஏற்படும் யுத்தம் மற்றும் ராஜரீக மன்றங்களில் ஏற்படும் விவாதங்களில் மட்டுமின்றி எல்லாக் காரியங்களிலும் அக்கரையுடையது. புல்வெளிகளில் மலரும் மில்லியன் கணக்கிலான மலர்கள் அவரது நித்திய நோக்கத்தின்படி ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. சதுப்பு நிலங்களிலிருந்து தவளைகள் குரல் எழுப்புவதிலிருந்து காட்டிலுள்ள ஓக் மரத்திலிருந்து ஒரு சிற்றிலை தரையில் விழுவதுவரை அவரது நித்திய ஞானத்தின் திட்டமாகும். பறவைகளின் இடம் பெயருதல் கொலம்பஸின் பிரயாணத் திட்டத்தைப் போல் ஒழுங்காயிருக்கிறது. தேவன் எல்லாவற்றிலும் இருக்கிறார். உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் ஒரு அடைக் கலான் குருவியும் தரையில் விழாது. நமது தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. இவ்வாறு சிறு பொருட்களைக் கூட சூழ்ந்த நிலையில் பாதுகாத்து தனது நித்திய நோக்கத்தின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ளும் ஆண்டவர் எதையும் வெறுக்கக்கூடும் என்று சந்தேகிப்பது கூடாது என்று தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

எப்படிப்பட்ட மனிதரை ஆண்டவர் அதிகமாக நேசித்திருக்கிறார் என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்தால் இது மிகத் தெளிவாகிவிடும். அவர்தெரிந்து கொண்ட வர்கள் யார்? இந்த உலகில் மகாப் பெரியவர்கள் என்னப்பட்டவர்கள் மீது அவர் அன்பு நெருக்கமாகச் செலுத்தப்பட வில்லை. "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அனேகரில்லை; வல்லவர்கள் அனேக ரில்லை; பிரபுக்கள் அனேகரில்லை" 1கொரி.1:26. பவுல் தனது இந்த நிருபத்தில் கொரிந்தியருக்கு என்ன எழுதுகிறார்? "உள்ளவைகளை அவமாக் கும்படி, உலகத்தில் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட் டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்" 1கொரி1:28. அவர் எவரையும் வெறுப்பதில்லை என்பது உறுதி. ஏனெனில் அவர் தமது சபையில் பிதாக்களை அபிஷேகம் பண்ணி, அப்போஸ்தலர்களாக பன்னிரு வரைத் தெரிந்து கொண்ட போது அவர் தத்துவ ஞானிகளையோ, அரசர்களையோ, உயர்குலத்தோரையோ தெரிவு செய்யாமல் ஏழை மீன் பிடிக்கிறவர்களைத் தெரிந்து கொண்டார். அன்று முதல் இன்றுவரை தமது பலத்த செயல்களை மிக எளிமை யானவர்களைக் கொண்டு செய்து வருகி றார். அவர் மிகுந்த வல்லமையுடையவர். அவர் எவரையும் வெறுக்கமாட்டார்.

இன்னொரு நிரூபணத்தை 22-ம் சங்கீதத்தில் நாம் பார்க்கிறோம். "உபத்திர வப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக் காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்" வச.24. உங்களில் சிலர் பலவிதமான ஆழமான தண்ணீருக்குள்ளும், சரீர வேதனை களிலும், ஏழ்மையிலும், பாடுகளிலு மிருந்தாலும் தேவன் உங்களைக் கைவிட வில்லை. உங்கள் கஷ்டங்களில் தேவன் உங்கள் அருகிலிருந்து தாம் நம்மை வெறுக்கவில்லை என்பதை நிரூபித் திருக்கிறார். "...ஆனாலும் சிறுமைப் பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" ஏசா.66:2.

இப்போதும் சகோதரனே, நான் கூறியிருக்கும் நிரூபணங்கள் அவர் சிறியவர்களை நோக்கிப் பார்ப்பதால் தமது பெருந்தன்மையைக் காண்பிக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அவர் சத்துவத்தில் மகாப் பெரியவர். அவர் சிந்தனையில் மகா ஞானமுள்ளவரா யிருப்பதால் எல்லாருடைய விருப்பங் களையும் கவனிக்கிறார். "கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகள் மேலும் உள்ளது" சங்.145:9.

அவர் உங்களை நேசித்து கனப்படுத்துகிறார்.

சோதிக்கப்படுகிறவர்கள் அதிகமாக ஊக்குவிக்கப்பட வேண்டும். யோபைப் போன்ற ஒரு நிலைக்கு நீங்கள் வர வில்லை. அவன் புழுதியில் உட்கார்ந்து கொண்டு தனது புண்களை ஓட்டினால் சுரண்டிக் கொண்டிருந்தானே. அப்படி ஒரு நிலையில் இருந்தால் கூட தேவன் வெறுத்துவிட்டதாக எண்ண வேண்டாம். கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரித்திருக்க அவர் எப்படி அவர்களை வெறுக்க முடியும்? உங்களுக்குத் துன்பங்கள் நேரிட்டிருந்தால் அவை அவருடைய அளவு கடந்த ஞானத் தாலும் மேலான அன்பினாலுமே தரப் பட்டுள்ளன. அவருடைய அனைத்து சத்தியங்களும், தெய்வீக நோக்கங்களும் உங்கள் முன்னால் வைக்கப்பட்டு, அவருடைய புரிந்து கொள்ளுதலை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டால் உங்கள் பிதாவின் நடத்துதலெல்லாம் சரியானவை என்றும் நன்மையானவை என்றும் ஒப்புக் கொள்வீர்கள். அவர் உங்களைப் புடமிடுவது உங்களை வெறுப்பதாலல்ல, அவர் உங்களை கனப்படுத்துகிறார். அவர் இயேசுவின் இரத்தத்தால் விலைக்கு வாங்கியபடியால் அவர் உங்களை மதிக்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உங்கள் வேதனைகளிலும் உங்களை மறப்பதோ உதாசீனம் பண்ணுவதோ இல்லை. அவர் உங்கள் மேல் அதிக அனுதாபமுள்ளவர். தூக்கமில்லாத இரவுகளில் அவரது கண்கள் உங்களைப் பார்க்கின்றன. படுக்கையில் தாதியரும் நண்பரும் விட்டுப் போய்விட்டாலும் அவர் இன்னும் உங்களோடேயே இருக்கிறார். "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" சங்.103:13. மகாப் பெரிய தேவன் தமது பிள்ளைகளாகிய எவரையும் வெறுப்பதில்லை. அவர் உங்கள் கண்ணீர்களைக் காண்பவரும் ஜெபங்களைக் கேட்கிறவருமாய் இருக்கிறார். மிகச்சிறியவர்களோடும் அவர் ஐக்கியமுடையவர். "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்" ஏசாயா 63:9.

அறிவிப்புகள்

❑ **வருகையின் தூதன்** ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

❑ **வங்கி வழியாக (Net Banking) காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு Phone பண்ணுங்கள் அல்லது SMS or Whatsapp அனுப்புங்கள்.**

❑ Cell :**95432 21008** Whatsapp :**9489740295**

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்

The Lord is my Shepherd

J.R.Miller (1840 -1912)

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்" சங்.23:1.

மேய்ப்பன் என்பவன் வேத புத்தகத்தின் மூலம் தெய்வீக அன்பு கரிசனை ஆகியவற்றை படமிட்டுக் காட்டும் விரும்பப்படத்தக்க ஒருவன். பழைய ஏற்பாட்டில் இருபத்து மூன்றாம் சங்கீதம் இதன் முழுமையான அற்புத சத்தியத்தையும் அழகிய வரிகளில் குறிப்பிட்டிருப்பதை வேதபுஸ்தகம் வாசிக்கிற ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளலாம். புதிய ஏற்பாட்டில் வரும் போது ஆண்டவராகிய இயேசு தமது சீஷரிடம் இனிமையாகத் தமது இதயத்தை வெளிப்படுத்தும் போது அவர்களிடம், "நானே நல்ல மேய்ப்பன்" (யோவா.10:11) என்கிறார்.

கிழக்கத்தி மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளுடன் தங்குவது வழக்கம். அவைகள் வெளியே புயலில் தங்கியிருந்தால் மேய்ப்பனும் அவைகளோடிருப்பான். அவைகளின் ஆபத்து நாட்களிலும் அவன் அவைகளைக் கைவிடுவதில்லை. அது போலவே கிறிஸ்து நம்மோடு ஜீவிக்கிறார். நம்மோடு நெருங்கிய உறவுடனிருக்கிறார். அனைத்து துன்பங்களையும் நம்மோடு சகிக்கிறார். புயல்கள் நம் மீது வீசும் போது அவை அவரையும் தாக்குகின்றன.

மேய்ப்பன் தன் ஆடுகளை அறிந்திருக்கிறான். அவன் ஒவ்வொரு ஆடுகளுக்கும் பெயர் வைத்து அப்பெயரால் அழைக்கிறான். அது போல கிறிஸ்துவும் தமது நண்பர்களை நன்கு அறிந்து நெருங்கிய உறவு வைத்திருக்கிறார். அவர் நம்மிலுள்ள நன்மைகளையும், தீமைகளையும், பாவங்களையும், அலைந்து திரிதலையும் அறிந்திருக்கிறார். ஆனாலும் நம்மை அறிகிற அவர், நம்மை நேசித்து இன்னும் கைவிடாதிருக்கிறார்.

மேய்ப்பன் ஆடுகளிடம் மிகவும் சாதுவாக நடந்து கொள்கிறான். அவன் அவைகளை விரட்டுவதில்லை. ஆனால் அவைகளுக்கு முன்சென்று அவைகளை நடத்துகிறான். அவை இளைப்பாற விரும்பும் போது அவற்றைப் படுக்க வைக்கிறான். அவை இளைப்பாற தூசி படிந்த ரஸ்தாவைத் தெரிந்து கொள்ளாமல், பசும்புல் தரையைத் தெரிந்தெடுக்கிறான். அவன் தன் ஆடுகளிடம் மிகுந்த இரக்கத்தைக் காண்பிக்கிறான். அவற்றை சேர்த்து தன் கரங்களால் அணைத்துக் கொள்கிறான். அவற்றை சுமந்து செல்கிறான். இவையெல்லாம் நல்ல மேய்ப்பனுடைய பண்புகளைக் காண்பிக்கும் படக்காட்சிகளாகும். நல்ல மேய்ப்பராகிய இயேசுவும் இவ்வாறு நம்மிடம் கரிசனையுடையவர். அவர் பராமரிப்பதுடன் பெலவீனமானவர்களிடம் அதிகக் கவனம் செலுத்துகிறார். அவர் குழந்தைகளை நேசித்துத் தமது மடியில் அவர்களுக்கு இடமளிக்கிறார். தேவைகளையெல்லாம் அறிந்து பூர்த்தி செய்கிறார்.

மேய்ப்பன் தனது மந்தையை ஆபத்திலிருந்து பாதுகாக்கிறான். தனது பாதுகாவலையும் ஜீவனையும் பொருட்படுத்தாமல் செயல்படுகிறான். அவ்வாறு அதனைப் பாதுகாக்கிறான். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனையும் கொடுக்கிறான்.

"அவரது கைகளிலும் கால்களிலும் விலாவிலும்கூட காயங்களின் தழும்புகள் உண்டு".

கிறிஸ்துவின் ஆடுகள் அவரது அரவணைப்பில் மிகவும் பாதுகாவலாயிருக்கின்றன. "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" யோவா.10:28. இறுதியில் அவன் அவற்றைப் பத்திரமாக வீடு கொண்டு வந்து சேர்ப்பான். "அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" 10:16.

நான் அவரை அறிந்து கொள்ள...

"That I may know Him"

George Muller

ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய நெருங்கிய அறிவை நான் பெறுவது எப்படி? "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" பிலி.3:10-11. கிறிஸ்துவை அறிவதற்காகவும் அதிகமாக நெருங்கிச் சேரவும் எல்லாவற்றையும் தள்ளி வைக்க விரும்பினார். இவ்வுலகின் இன்பங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். இவ்வுலக வேட்கைகள் இயேசுவின் பாதங்களில் வைக்கப்பட வேண்டும். இவ்வுலக ஐசுவரியங்கள், கனம் ஆகியவற்றை இயற்கையாக மனம் நாடுகிறது. ஆனால் அவையெல்லாம் ஒதுக்கப்பட வேண்டும். நாம் ஆசையோடு நாடுகிற யாவும் ஆண்டவருடைய பாதத்தில் படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் பவுலோடு மேற்கூறிய வாக்கைக் கூறமுடியும். இதன் ஒரே நோக்கம் தேவனுக்காக வாழ்வதாகும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு:

பெருமை உலகிலும் சபையிலும் நுழைந்துவிட்டபடியால் பாவத்துக்கு புது விளக்கங்கள் கொடுக்கப்பட்டு சீரழிவு தேசம் முழுவதும் வெட்டுக்கிளிகள் போல் பரவிவிட்டது.

கடமைகள் செய்யும் போது அது மனிதரைப் பிரியப்படுத்துவதைவிட தேவனைப் பிரியப்படுத்துகிறதா என்பதில் மிகக் கவனமாயிருப்பீர்கள்.

மேய்ப்பன் என்பவன் வேத புத்தகத்தின் மூலம் தெய்வீக அன்பு கரிசனை ஆகியவற்றை படமிட்டுக் காட்டும் விரும்பப்படத்தக்கன்.

ஒரு மனிதனும் தன் பார்வையில் பெரியவனாய் இருக்க மாட்டான்; அவன் கண்கள் உயர்ந்தவரும், அவர் நாமம் பரிசுத்தரும், அவர் ஒருவரே பெரியவருமான தேவனில் நிலைத்திருக்கும் போது.

தேவனைப் பற்றிய நமது பார்வை சரியாயிருந்தால், நம்மீதுள்ள நமது பார்வை சரியாயிருந்து நாம் ஒன்றுமில்லை என்று நம்மைத் தாழ்த்துவோம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason